மாவட்டத்தைப் பொறுத்து மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டதாகும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தனிக் கேள்வி கேட்டால் தக்க பதில் தர முடியும்.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவிலில் உற்பத்தியாகின்ற நெல்லைக் கொண்டு போவதற்கு போக்குவரத்துச் செலவு அதிகமாக ஆகிறது. மேலும் கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை போன்ற இடங்களுக்கு நெல்லைக் கொண்டு செல்ல போக்குவரத்து வசதி இருக்கின்ற காரணத்தால் சிதம்பரத்தில் ஏற்கெனவே உள்ள மத்திய அரசு ஆலையை தமிழக அரசே வாங்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் நம்மிடம் இருக்கும் பணத்தைப் போட்டு இந்திய அரசு நடத்தும் ஆலைகளை வாங்குவதை விட நாமே புதிதாகக் கட்டலாம். நாமே கட்டுவது தான் ஆதாயமாதலால் அதை நாம் எடுத்துக் கொள்வது நிச்சயமாக நன்மை தராது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழக அரசு நவீன அரிசி ஆலைகள் தொடங்க இருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த நவீன அரிசி ஆலைகளில் தவிடு நீக்கப் படாத அரிசியை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்து அதன் மூலம் நம் நாட்டு மக்கள் சத்தான அரிசி பெற அரசு வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் அறிவுக்கு அப்பாற்பட்ட தொழில் நுட்பக் கேள்வியாக இருப்பதால் தனிக் கேள்வி போட கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தொகுதி சோழவந்தானில் புதிய தொழிற்பயிற்சி நிலையம்.

212—(*வினா எண் 1215) திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் நகரில் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1987 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்பொழுது மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம் சோழவந்தான் நகரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தானைச் சுற்றிப் பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. சோழவந்தான் தொகுதியில் இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் சோழவந்தானில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்தினால் அங்குள்ள பல்வேறு கிராமங்களிலுள்ள வேலையற்ற வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புப் பெற, பயிற்சி பெற, உதவிகரமாக இருக்கும். இப்போது அங்குள்ளவர்கள் மதுரை, திண்டுக்கல் போன்ற இடங்களுக்கு போக வேண்டியிருப்பதால் ஒரு தொழிற் பயிற்சி நிலையத்தை சோழவந்தான் நகரில் அரசு அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் தற்போது முறையே மதுரை, தேனி, செக்கானூரணி ஆகிய இடங்களில் ஏற்கெனவே தொழிற் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. எனவே புதிதாக சோழவந்தானில் ஆரம்பிக்கின்ற உத்தேசம் இல்லை.

பட்டுக்கோட்டை நகராட்சியில் திருமணக் கூடம்.

213—(*வினா எண் 3885) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகராட்சியில் திருமணக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தற்சமயம் இல்லை.